சிவமயம்

Registered as a News-paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் [illegible] ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருகூ] யாழ்ப்பாணம்:—தாரண வருடம் மாசிமீ ௪ அவ (1945 மார்ச்மீ 1உ திங்கட்கிழமை) [இல அகூ

## அமெரிக்காவில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி

### பாராளுமன்றத்தில் "கொன்செவேட்டிவ்" பதைபதைப்பு

ஸ்ரீமதி. விஜயலக்ஷ்மி பண்டிட் இந்தியாவில் எவ்வித மதபேதமுமில்லையென்றும், இந்தியா பெரிய சிறைக் கூடமாகத்தான் இருந்து வருகிறதென்றும் அமெரிக்காவில் கூறியது வெறும் கற்பனையே யென்று சென்ற பாராளுமன்றக் கூட்டத்தில் இந்தியா மந்திரியாகிய மிஸ்டர். அமெரி கூறினர்.

அப்பொழுது மேஜர் ஜெனறல் ஸேர். அல்பிரட் நொக்ஸ் பின்வருமாறு கேட்டார்:—

பஸிபிக் உறவு மகாநாட்டிற்கு ஒரு பிரதிநிதியாகச் சென்றிருக்கும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட். வாஷிங்டனில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், இந்தியா முழுவதுமே ஒரு சிறைக் கூடமென்றும், அத் தேசத்தில் மதவேற்றுமைகளே கிடையாதென்றும் கூறியிருப்பதைப் பற்றி மிஸ்டர். அமெரி ஆலோசித்தாரா? நமது தேச நாட்டின் பொதுஜன அபிப்பிராயத்தில் இத்தகைய கூற்றுகளால் ஏற்படக்கூடிய பலத்த மாறுதல்களை மாற்றுதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மிஸ்டர். அமெரி ஆலோசித்து வருகிறாரா?

மிஸ்டர். அமெரி:- குறிப்பிட்டிருக்கும் பிரசங்கத்தை நான் படித்தேன். இத்தகைய கூற்றுகள் எவ்விதம் மோசமான, கற்பனைகள் என்பதை அமெரிக்க மக்கள் இதற்குள்ளே அறிந்துவிட்டார்கள் என்பது வாஷிங்டனிலிருக்கும் இந்திய ஏஜெண்டு ஜெனறலுக்கும், பிரிட்டிஷ் விளம்பர அதிகாரிகளுக்கும் நிச்சயமாகத் தெரியாதிருக்கும் பட்சத்தில் இது சம்பந்தமாக என்ன செய்ய வேண்டியது அவசியமென அவர்கள் நினைக்கிறார்களோ அதைக் கட்டாயம் செய்வார்கள் என்பது நிச்சயம்.

மேஜர் ஜெனறல் நொக்ஸ்;-

இக்காரியங்களில் பொது ஜனங்கள் புத்திசாலிகளாக இருக்கும்படி, செய்வதற்கான காரியங்களை நமது விளம்பரக் காரியாலயத்தார் செய்திருக்கின்றனரா?

மிஸ்டர். அமெரி.- ஆம். வாஷிங்டனிலிருக்கும் நமது விளம்பர அதிகாரிகள் மிகவும் நல்ல வேலைகளைச் செய்து வருகின்றனர்.

லோட்வின்டர்டன்:— காங்கிரஸ் கட்சி, மிகவும் பிற்போக்காளரான முதலாளிகளாலேயே நடத்தப்படுகிறது என்று ஸ்ரீ ராயும் மற்றவர்களும் கூறுகின்றனர். இந்த அபிப்பிராயங்களை நமது விளம்பர அதிகாரிகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிட்டு வருகின்றனரா?

மிஸ்டர், அமெரி:- இதைப் பற்றி விசாரிக்கிறேன்,

மிஸ்டர். ஸோரென்ஸன்.- இந்திய அரசாங்கத்திடம் 12300 பவுணைவாங்கிக் கொண்டு வருகிறாரே அந்த ஸ்ரீ ராயைப் பற்றித் தானே லோட் விண்டர்டன் குறிப்பிடுகிறார்?

மிஸ்டர். அமெரி:: அந்த விஷயத்தைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேன்.

---

## வடமாகாணத்திற்கு ஸோல்பெரிக் கமிஷனர்கள் விஜயம்

ஸோல்பரிக் கமிஷனர்கள் மார்ச் மாசம் 7-ந் திகதி வடமாகாணத்திற்கு விஜயம் செய்வார்களெனத் தெரிகிறது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு தினமும் மன்னார் முல்லைத்தீவுப் பகுதிகளில் ஒவ்வொரு தினமும் தங்குவார்களென அறியப்படுகிறது.

---

## 1948-ல் 3-வது மகாயுத்தம் ஏற்படுமாம்

"டாஸ்ரீச் என்னும் பத்திரிகையில் டாக்டர் கோயபல்ஸ் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் 3-வது உலக மகாயுத்தம் 1948-ம் வருஷத்தில் ஆரம்பமாகுமெனக் கூறுகிறார்.

யல்டா மகாநாட்டு முடிவுகள்பற்றி ஏதேதோ எழுதிவிட்டு அவர் அடுத்த மகாயுத்தம் மிகவும் குறுகிய காலத்துக்குத்தான் நடக்கும் என்கிறார். அவர் மேலும் எழுதியிருப்பதாவது:-

பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் முதலில் யுத்தம் மூளும். பிறகு ரஷ்யா அமெரிக்காமீது தாக்குதல் நடத்தும். அப்பொழுது ரூஸவெல்ட் பதவியிலிருந்து விலகி, ஜனங்களால் மறக்கப்பட்டவராகவிருப்பார். அப்பொழுது தங்களது பழைய பிரஜாதிபதி இம்மாதிரியான விபரீதம் ஏற்படும்படியான யல்டா மகாநாட்டு அறிக்கையை ஒப்புக்கொண்டாரே என்று அறிக்கை வெளியான தினத்தை நினைத்து அதைச் சபிப்பார்கள்,

---

## "அட்லாண்டிக்" சாஸனம் ஒரு வழிகாட்டியே

"அட்லாண்டிக்" சாசனம் ஒரு வழிகாட்டியேயன்றி அது ஒரு விதியல்ல என்று சேர்ச்சில் பாராளுமன்றத்தில் கூறினாராம்.

ஒரு தேசத்தின் சுயேச்சையான அபிப்பிராயத்தின்படி யல்லாது எந்தப் பிரதேச மாற்றத்தையும் நேச நாடுகள் அங்கீகரிப்பதில்லை என்று கூறும் அட்லாண்டிக் சாசனத்தின் 2-வது விதி, லட்வியா, லிதுவேனியா எஸ்தோனியா, போலந்து ஆகிய நாடுகள் விஷயத்தில் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா என்று "கொன்சர்வேட்டிவ்" அங்கத்தினராகிய மிஸ்டர் பெதிக் கேட்ட கேள்விக்கு மிஸ்டர் சேர்ச்சில் மேற்கண்டவிதமாகப் பதிலளித்தாராம்.

---

## தென்னைமரத்தின்மீது வாலிபனின் தவம்

சிலாபம் நகரின் வடபுறத்தில் ஒரு தென்னை மரத்தின்மீது ஒரு வாலிபன் ஒரு வாரமாக உட்கார்ந்து மரத்திலுள்ள இளநீரும் தேங்காயுமே உட்கொள்ளுகின்றானாம்:

கீழ் யிறங்கி வரும்படி எவ்வளவோ ஜனங்கள் கேட்டும் பயனில்லையாம். அவனிடம் ஒரு அரிவாள் இருப்பதால் யாரும் மேலே ஏற அஞ்சுகின்றார்கள். [illegible]

---

லட்சுமிகாந்தம் கொலை வழக்கு

## கொலையை நேரிற் கண்ட கோபாலன் கூறுவது

(தொடர்ச்சி)

7-வது சாட்சியாகிய டாக்டர் மங்கேஷ்ராவ் விசாரிக்கப்பட்டபொழுது கூறியதாவது:

நான் வைத்தியக் கல்லூரியில் ரண வைத்தியப் பேராசிரியர். ஜெனறல் ஆஸ்பத்திரியில் "ஸேர்ஜன்" வேலையும் பார்ப்பதுண்டு.

8-11-44 சுமார் 11-45 மணிக்கு நான் லட்சுமிகாந்தம் என்ற நோயாளியைப் பார்த்தேன். அவர் சாதாரண உணர்வுள்ள நிலையிலிருந்தார் என்று சொல்லமுடியாது. தியேட்டர் எதிரில் ஒரு பொலிஸ் அதிகாரி நீதிஸ்தலத்தில் காட்டப்படும் இந்தக் கத்தியைப்போல ஒரு கத்தியை வைத்துக் கொண்டு நின்றார். இரத்தத்தைச் சோதிக்க வேண்டுமென்று சொன்னேன். கத்தி முனை காணாமலிருந்ததைக் கண்டு உடனே எக்ஸ்ரே பிடிக்குமாறுஞ் சொன்னேன். மேலுஞ் சுமார் 1-30 மணிக்கு டாக்டர் பாலகிருஷ்ணன் என்னைக் கூப்பிட்டார், நான் தியேட்டருக்குள் சென்றேன், அப்பொழுது மூத்திரத்தில் ரத்தம் கலந்திருந்தது என்று சொன்னார்கள். மூத்திரக்குழாய் சுழிந்திருந்தால் இது ஏற்பட்டிருக்கக்கூடும்.

7-ம் எதிரி சார்பாக வக்கீலால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

இரத்தப் பிளாஸ்மா கொடுத்திருந்தால் நோயாளியின் உயிரைக் காப்பாற்றியிருக்கக்கூடும். அப்பொழுதும் கடவுள்தானே காப்பாற்றவேண்டும்.

இரத்தப் "பாங்கி"லும் அதிக ஐரோப்பியர்களே தானிருக்கிறார்கள், இந்தியர்கள் அவ்வளவில்லை, இது எனக்கு அவமானமாகத்தானிருக்கிறது.

ராஜகோபாலாச்சாரியார்:— சாட்சிக் கூண்டிலிருந்து சாட்சி இம்மாதிரிப் பிரசாரம் செய்யவேண்டிய அவசியமில்லை.

பின் 8-வது சாட்சியான சே. டீ. ஷேரீவ் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

நான் சென்னை நகர கௌரவ நீதிபதி, 10-11-44ல் வேப்பேரி ஜி. பொலிஸ்தலத்தில் நான் ஆள் அடையாள அணிவகுப்பை நடத்தினேன், காலை 9-45 மணிக்கு நான் பொலிஸ்தலத்திற்குச் சென்றேன். சென்ற 5, 10 நிமிஷங்களில் [illegible] அறைக்கு என்னை அழைத்துச்சென்று வடிவேலுவைக் காட்டினார்கள்; அடையாளம் கண்டுபிடிக்கவேண்டிய சாட்சி பொலிஸ்தலத்தின் வெளியே [illegible] நின்றார். கோபால் என்ற றிக்சோக்காரன் வடிவேலுவை அடையாளம் காட்டினான்.

அரசினர் சார்புச் சாட்சியாகிய நாயுடு கூறியதாவது:—

நான் வேப்பேரி ஜி. டிவிஷனைச் சேர்ந்த கொன்ஸ்டபிள். 3-11-44 இரவு நான் பொலிஸ்தலத்தில் காவலில் இருந்தேன். 9-ந் தேதி காலை சுமார் 6 மணிக்குப் பூக்கடை பொலிஸ்தலத்தின் தலைமைக் கொன்ஸ்டபிளிடமிருந்து டெலிபோன் செய்தி வந்தது நான் அச்செய்தியை டெலிபோன் செய்திப் புஸ்தகத்தில் பதிவு செய்தேன். அதை இப்பொழுது வாசிக்கின்றேன்,

ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து காலை 4-15 மணிக்கு லட்சுமிகாந்தம் இறந்துபோனதாகச் செய்தி கிடைத்தது.

உதவி இன்ஸ்பெக்டர் பாசுராமிற்கு இது தெரிவிக்கப்பட்டதென்று அச்செய்தியில் எழுதியுள்ளனர். இதை நான் "கிரைம்" தலத்திற்குச் சொன்னேன்.

இதன்பின்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் கோட்டில விசாரணை நடக்கும்போது இருக்கலாமென்பதற்கு அரசினர் வக்கீல் ஆதாரங்கள் எடுத்துக் காட்டினர்.

விசாரணை அதிகாரி அரசினர் வக்கீலுக்கு ஒத்தாசை செய்ய வக்கீல் முறையிலிருக்கிறார் என்ற வாதம் சட்ட சரித்திரத்திலேயே இக்கோட்டில்தான் முதன் முதல் செய்யப்பட்டுள்ளதென்று திரு. வ. இராஜகோபாலாச்சாரியார் வாதாடினர்,

இந்த வழக்கு விசாரணையில் பிரதான பங்கெடுத்துக் கொண்டுள்ள இன்ஸ்பெக்டர் கேசவமேனன் கோட்டிலிருப்பது நீதிக்கு விரோதம், என்னுடைய கட்சிக்காரர்கள் ஆங்கிலம் தெரியாதவர்கள். பொலிஸ் அதிகாரி கோட்டிலிருப்பது சாட்சிகளை மிரட்டுவதற்கென்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

நீதிபதி இதுபற்றித் தம் முடிவைப் பிறகு தெரிவிப்பதாகக் கூறினார். பின்பு இன்ஸ்பெக்டர் கேசவமேனனை அரசினர்தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்படும்பொழுது கோட்டில் இருப்பதுகூடாதென்று வாதாடப்பட்டது.

பொலிஸ் அதிகாரி கோட்டைவிட்டு வெளியேறுவது உசிதமென்று நீதிபதி யுத்தரவிட்டார்

இதன்பேரில் இன்ஸ்பெக்டர் கேசவமேனன் நீதிஸ்தலத்தைவிட்டுவெளியேறினார்.

10 வது சாட்சியாக றிச்சோக்காரன் கோபாலன் விசாரிக்கப்பட்டான்

நான் புரசையில் இப்பொழுது கூலி வேலை செய்கிறேன். 3 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் காலை புரசை ஹைரோட் மூக்கருத்தான் தெரு முனையில் றிச்சோவுடன் நின்றேன். அது புதன் கிழமை காலை சுமார் 8-30 மணி; அப்பொழுது ஒருவர் வந்து வண்டி கேட்டார்; அவரை எனக்குமுன்பின் தெரியாது. மாடத்தெரு வக்கீல் நற்குணம் வீட்டிற்குச் சவாரி போக வேண்டுமென்று அவர் சொன்னார்; அவர் கையில் ஏதோ சாமான் வைத்திருந்தார். வக்கீல் வீட்டிற்கு நான் சவாரி போனேன்; அவர் [illegible] சென்றார்; நான் வெற்றிலை போட்டுக்கொண்டு கீழேயிருந்தேன்; சுமார் அரைமணிநேரம் வக்கீலுடன் பேசிக்கொண்டிருந்தார். பின்னால் அவர் கீழே வந்து வண்டியில் ஏறிப் புதுமார்க்கெட்டுக்குச் சீக்கிரம் போக

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
மாசிமீ ௨௮உ வியாழக்கிழமை.

## யுத்தநிலை

அயிரோப்பாக் கண்டத்தில் நிகழும் யுத்தம் எவரும் எதிர்பார்த்திருக்கிறபடி மிகவும் விரைவில் முடியுமென நம்பியிருக்க வொண்ணாதெனப் புலப்படுகின்றது; சென்ற வாரத்தில் ருஷிய - ஜர்மனிய யுத்த முனையில் ருஷிய சைனியத்தை ஜர்மனியப்படை எதிர்த்துத் தாக்கிய பொழுது சொம்மர்வீல்ட், சொரே, சகான் என்னும் சில பட்டினங்களை ருஷியரிடமிருந்து திருப்பிப் பிடித்துவிட்டனரெனவும் செய்தி பிறந்தது; ஆனால் இச்செய்தி நிசமல்லவென்பது பிந்திவந்த சமாசாரங்களைக்கொண்டு அறியக்கிடக்கின்றது! எங்ஙனமாயினும் ஜர்மனியர் தங்கள் தாய்நாட்டினைப் பாதுகாத்தற்பொருட்டு முன் எக்காலத்திலுஞ் செய்யாத கோரமான யுத்தஞ் செய்கின்றனரென்பது உணரத்தக்கது. கிழக்குப் புருஷியாவிலே கொனிக்ஸ்பேர்க் என்னும் பட்டினத்தைக் கைப்பற்றும் பொருட்டு ருஷியப்படை கடுஞ்சமர் புரிகிறது. இத்தலிய யுத்தமுனையில் நின்று சமர் செய்யும் ஜர்மனியப்படையிற் பெரும்பாகம் ருஷிய யுத்த முனைக்குக் கூப்பிடப்பட்டனவென்றுஞ் சொல்லப்படுகிறது; இந்தச் சமயத்தில் அமெரிக்க பிருத்தானிய சைனியமும் ஜர்மனியரை அடித்து விடலாமே யென்பது பலருடைய கொள்கை; டுறஸ் என்னும் பட்டினத்துள் அமெரிக்க பிருத்தானிய சைனியம் புகுந்துவிட்டதெனத் தெரிவிக்கப்படுகின்றது. ஜர்மனியர் தாம் மாளுவது நிசமெனினும், தங்கள் பகைவருக்கு இன்னும் அதிகசேதம் விளைத்துவிட்டே மாளவேண்டுமென்ற நோக்கத்துடன் யுத்தஞ் செய்கிறாரெனச் சொல்லுதல் மிகையாகாது.

இனி, யப்பானியருக்கும் ஆங்கில அமெரிக்கருக்குமிடையே நடக்கும் கிழக்குப் பகுதி யுத்தத்திலும் இப்பொழுது ஐக்கிய ராச்சியத்தினர் அநுகூலமடைந்து வருகின்றனரென்றே சொல்ல வேண்டும்; சென்ற வாரம் பஸிபிச் சமுத்திரத்தில் அமெரிக்க ஆகாயப்படையும் கடற்படையும் யப்பானியர்க்குப் பலவகையான சேதங்களை விளைவித்து விட்டனவெனலாகும். ஐவோஜீ மாத்தீவில் அமெரிக்க சைனியம் புகுந்துவிட்டது; இது யப்பானியருக்கு மிகவும் பிரதானமான தீவெனச் சொல்லப்படுகிறது. யப்பானிய தலைநகராகிய தொக்கியோவில் அமெரிக்க ஆகாயப்படை விளைத்தசேதம் முன்னெக்காலத்திலுமில்லாதது; ஆயினும் யப்பானியர் அமெரிக்க ஆகாயப் படையைத் துரத்தவும் அப்படைக்குச் சேதம் விளைவிக்கவும் போதிய முயற்சி செய்ததாகப் புலப்படவில்லை; நோக்கம் யாதென்பதும் விளங்கவில்லையாம். இப்படி யப்பானியர் சோர்வாக விருத்தலைக் கண்டு அவர்களும் ஜர்மனியரைப் போல்தோல்வியுறும் நிலைமையிலிருக்கின்றார்களென்று ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் மதித்துவிடவொண்ணாதென அரச தந்திரிகள் சிலர் எச்சரிக்கின்றனர்; ஐக்கிய இராச்சியக் கடற்படை யப்பான் தீவுகளுக்கு அணித்தாகச்சென்று தாக்கியபோது யப்பானிய கடற்படை இன்னமும் தலைகாட்டாதிருப்பதன் காரணம் யாதெனப் பலர் சிந்திக்கின்றார்களாம்.

ஜப்பானியரை ஐக்கிய ராச்சியத்தினர் நேரிற் சென்று தாக்குவதைக் காட்டிலும் சீனத்தின் கிழக்குக் கரைகளிலுள்ள தானங்களை ஆகாயப்படைத் தரைப்படைக் கட்டுத் தானமாக வைத்துக்கொண்டு யப்பானியரைத் தாக்கப்புகின் வெற்றி வருமெனவும் அதிக சேதமும் கஷ்டமுமில்லாமல் ஐக்கிய இராச்சியத்தினர்க்குத் துணைபுரிதல் முடியுமெனவும் சீன ராசதந்திரிகள் சிலர் தெரிவிக்கின்றார்கள்.

இனி, பர்மா யுத்தமுனையிலே பிருத்தானிய இந்திய சைனியம் மெல்ல மெல்ல வெற்றி பெற்று வருகின்றதெனவே தெரிவிக்கப்படலாயிற்று.

## அம்மை நோய் அகன்று விட்டது

யாழ்ப்பாணப் பகுதியிற் பலவூர்களிற் சில மாசங்களாகப் பரவியிருந்த அம்மைநோய் இப்பொழுது அறவே அகன்றுவிட்டதெனச் சொல்லலாகும்; இந்த யாழ்ப்பாணப் பட்டினத்தில மூந்தி வண்டிகளும் சனங்களுஞ் சஞ்சரிக்கவொண்ணாதெனத் தடுக்கப்பட்டிருந்த தெருக்கள் ஒழுங்கைகள் சந்திகளெல்லாம் இப்பொழுது எவரும் எவையும் செல்லத் தக்கனவாகவிருக்கின்றன; இன்னும் இத்தொற்று நோய் விஷயமாக இருந்த கட்டுப்பாடுகளெல்லாவற்றையும் அவைகளெல்லாம் அகற்றப்படலாயின.

## இந்துவாலிப சங்கம் சங்கராந்தைத

நிகழும் தாரணவருஷம் மாசிமாசம் 10ந் திகதி புதன்கிழமை (21-2-45) சின்னம்மா வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த மேற்படி சங்கப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1 சங்கரத்தைப் பத்திரகாளியம்மன் கோவில் முகாமைக் காரர்களாகிய திருவாளர்கள்: சி. தம்பிராசா, சி. இராசநாயகம், ந. ஆறுமுகம் என்பவர்களால் மேற்படி கோவிலில் ஆடு கோழி வெட்டிப் பலியிடுதலைத் தவிர்த்துவிட்டதாக தாரண வருஷம் புரட்டாதிமாசம் 3ந் திகதி வெளியான இந்துசாதனப் பத்திரிகை மூலம் கொடுத்த அறிவித்தலை இச்சங்கம் ஆதரிக்கின்றது.

2. நிகழும் தாரணவருஷம் தை மாசம் 27ந் திகதி (9-2-45) வெள்ளிக்கிழமை சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் தேவியின் அன்பர்களாகிய ஊரவர்களால் மிகவுஞ் சிறப்பாக நடத்தப்பட்ட குளிர்த்தியிலன்று மேற்படி கோவில் முகாமைக்காரர்களுஞ் சிலரும் கோயிற் சந்நிதானத்தில் கலகஞ்செய்யப்பட்டதை இச்சங்கம் கண்டிக்கின்றது.

மேற்படி இரு தீர்மானங்களையும் பத்திரகாளியம்மன் கோவில் முகாமைக்காரர்களுக்கும், எங்கள் அயற் கிராமங்களிலுள்ள இந்து சங்கங்களுக்கும் கடிதமூலம் அறிவித்து அவர்களை எங்கள் சங்க நோக்கங்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்பதற்குத் தீர்மானித்திருக்கின்றோம்.

மேற்படி சங்கக் காரியதரிசி.

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை செட்டியா மடத்திலுள்ள 'கணவக்கை' என்னும் பெயருள்ள 28 லாச்சம் நெல்வயல் விற்பனைக்கிருக்கிறது. வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு பணுசெப்க:

கா. சுரேந்திரன்
31, 42-ம் லேன்,
வெள்ளவத்தை,

Mi; 228, 1-3-45.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—41)

### "ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டும்"

"அண்ணா, எந்தக் காரியத்தையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டுமென உலகம் சொல்லும் பழமொழி உங்களுக்குத் தெரியாததல்ல; உங்களுடைய மாமனார் மாமியார் மைத்துனி ஆகிய அவர்கள் உங்களை ஏதுங் காரணமில்லாமல் வெறுத்திருக்க மாட்டார்கள்; பன்றியொடு கூடிய கன்றும் மலமருந்தப் பயிலுமென்பர்; இந்தப் பாலசிங்கனுடைய கூட்டுறவே உங்களை உங்கள் சொந்தக்காரர் விபரீதமாக நினைக்கச் செய்துவிட்டதென நினைக்கிறேன்; நீங்கள் உங்கள் அருமையான மைத்துனியைக் கல்யாணஞ் செய்யவொட்டாது குழப்பி வைக்கும்படியே இந்தப் பாலசிங்கன் இந்த வீட்டிற்கு உங்களை வரச்செய்தானென்பதையும் உங்களுக்கு மதுபானம்வழங்கும்படி எனக்குச் சொல்லியிருந்தானென்பதையும் நானே முந்தி உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; உங்கள் சம்பந்தத்தைக் குழப்ப அவன் இன்னும் எத்தனை சூழ்ச்சிகள் செய்தானோ ஆர் கண்டார்கள் அண்ணா; செல்லுகிறேனென்று குறை யெண்ணாதீர்கள்; இந்தத் தீயர் சகவாசத்தால் உங்களை நீங்களாகவே கெடுத்துக்கொண்டு உண்மையை உள்ளபடி யுணராத மாமன் மாமியையும் மைத்துனியையுங் குறை கூறுவதும் வெறுப்பதும் முறையல்ல; பிறிடத்துக் குற்றங் காணுமுன் தன்னிடத்திலுள்ள குற்றத்தை ஆராயவேண்டுமென்று உங்களைப்போலப் படித்தவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; முகம் பழுதாகவிருந்தால் அதனைக் காட்டும் கண்ணாடியைக் குற்றஞ் சொல்லலாமா? மேலும் இந்த உலகத்தில் உண்மை வெளிவருவதற்குக் காலஞ்செல்லும்; வெகுதூரம் போகவேண்டாம்; என்னைப்பற்றியும் நீங்கள் இங்கே வந்து போவதையிட்டும் இந்த அயலட்டத்திலுள்ளவர்கள் அபவாதஞ் சொல்லுவார்தாமே; அவைகளெல்லாம் உண்மையா? உங்களையும் என்னையும்பற்றி அபவாதமான கதை உங்கள் மாமனாரையுங் கிட்டியிருக்கக் கூடுந்தானே, மாமனார் அறிந்தால் அவர் தம் மனைவிக்கும், தாய் மகளுக்கும் தாங்கள் எங்களைப்பற்றிக் கேள்விப்பட்டதைச் சொல்லியிருத்தலுங் கூடுந்தானே; அவர்கள் இந்தக் கதையை உண்மையென்று நம்பினால் அதனால் மனவருத்தப்படுதலும் உங்களை வெறுத்தலும் இயற்கைதானே; ஆனதால் அதனைவிட்டு நீங்கள் அவர்களைக் குறைகூறுவது முறையாகுமா? அண்ணா, தெய்வத்திலே பூரண நம்பிக்கைவைத்துக் கொண்டு மனசாட்சிக்கு மாறின்றி நடந்தால் எவ்வகையான குறையும் எங்களுக்கு நேராது" என்று பரிவுடன் இரஞ்சிதம் விசுவநாதனுக்குப் பகர்ந்தாள்; விசுவநாதனும் கேட்டுச் சிறிதுநேரம் யாதும் பேசாது அவள் சொன்னவைகளை ஊன்றிச் சிந்தித்தான்; "இரஞ்சிதம், என் அரிய தங்காய், நீ சொல்வது அத்தனையும் நிசம்; நீர் இவ்வளவு புத்திசாலியென்பதை நான் இதுவரையில் அறியவில்லை; "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற அந்தப் பெரியார் வாக்கைப் பாராட்டுகிறேன்" என்று சொல்லிமுடித்தான், "அண்ணா, நான் அன்புமேலீட்டினால் இவைகளைச் சொன்னேனேயொழிய, உங்களைக்காட்டிலும் அதிகமறிந்தவளென்றெண்ணி ஏதுஞ் சொன்னேனல்லேன்; ஆனதால், நான் சொன்னதையிட்டு என்னை நீங்கள் வித்தியாசமாக விளங்கிக்கொள்ளவொண்ணாதென உங்களைப் பணிவுடன் கேட்கிறேன்" என்று சொல்லி நமஸ்காரஞ் செய்ய, அவனும் "அப்படி நான் ஏதும் நினைக்கவில்லை" என்று சொல்லிப் பிரதி நமஸ்காரம் செய்தான்.

### "பார்த்தாற் பசு, பாய்ந்தாற் புலி"

விசுவநாதன் பின்னரும் சற்று நேரம் இரஞ்சிதத்துடன் இருந்து பேசிவிட்டு அவளிடம் விடை பெற்றுக்கொண்டு தன் இல்லஞ் சேர்ந்தான்; அவன் போனபின் இரஞ்சிதம் தாய்க்கிழவி யிருக்குமிடத்திற்குப் போய் "கதிர்காம யாத்திரை விஷயத்தில் நீங்கள் எப்பொழுதும் தவணையிட்டு வருகிறீர்கள், என்னை அந்தத் தலத்திற்குக் கூட்டிக்கொண்டு போகிறோம், போகிறோமென்று சொல்லுகிறீர்களேயொழிய நான் இங்கே வந்து எத்தனையோ மாசங்களாகியும் இன்னமும் அந்தக் கதிர்காமத்தையனைத் தரிசிக்க நீங்கள் உதவுசெய்கின்றீர்களில்லையே; உங்களால் முடியாதென்றால், பாட்டி, நீங்கள் உண்மையைச் சொல்லிவிடுங்கள்; நான் எவ்விதத்திலும் அங்கே போய்ச் சேரவேண்டும்" என்று சொன்னாள், இப்படி இரஞ்சிதங் கேட்டமை கிழவிக்குப் "பிடிக்க"வில்லை; ஆனாற் கிழவியும் சாமானியமானவளல்லள்; வஞ்சகஞ், சூது, பொறாமை முதலிய தீய குணங்களெல்லாம் கிழவி பிறக்கும்போதே உடன் பிறந்து அவளோடு வளர்ந்தனவெனலாம்; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் விஷயத்தில் கிழவிக்கு ஒப்பானவரொருவருமில்லையெனலாம்; இராமருடைய பட்டாபிஷேகத்தைக் குழப்பிய கூனியெனப்படும் மந்தரையும்சதியாலோசனை செய்ததில் இந்தப் பாட்டியை நிகர்க்கமாட்டாளெனலாம்; "பார்த்தாற் பசு எனினும் பாய்ந்தாற் புலியாவேன்" என விறலியிடுதலிற் சொல்லப்பட்ட அந்தக் கிழவிதானும் வஞ்சகப் பேச்சில் இந்தக் கிழவிக்கு இணையாகமாட்டாளெனலாம்; இக்கிழவி பாலசிங்கனுடைய கேள்விப்படி இரஞ்சிதத்தையும் விசுவநாதனையும் ஆரம்பத்தில் தம்மிஷ்டமாய்ப் பேச இடங் கொடுத்தாளெனினும் இரஞ்சிதத்தைத் தனனுடைய எண்ணப்படி நடப்பதற்குவிடாமல், அந்த இரஞ்சிதம் தான் நினைத்தபடி நடக்கத் தூண்டிவிடுபவனும் அவளுக்குப் புத்தி சொல்லுபவனும் அந்த விசுவநாதன்தான் என்பதைப் பாட்டி காலகதியில் அறிந்து கொண்டாள்; விசுவநாதன் வந்தால் அவனை ஒருவாறு உபசரித்துச் சில கிஷேமே

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியும் உருவமும்

(வே. நாராயணன்)

கவிதையைத் தமிழில் 'பாட்டு' என்றும் 'பாடல்' என்றும் சொல்வது வழக்கம். இதற்குக் காரணம் தமிழ்க் கவிகள் பெரும்பாலனவும் இசைத் தமிழாகவும் நாடகத் தமிழாகவும் அமைந்திருப்பதுதான். நாடகத் தமிழுக்கும் இசை வேண்டியது அவசியம். இந்தத் தமிழை இருவகையாகப் பிரிக்கலாம், இராகத்திற்கு ஏற்றதாக அமைவது, இராகத்தோடு தாளத்திற்கும் ஏற்றதாக அமைவது என்று. நாடகத் தமிழுக்கோ தாளக்கட்டு இன்றியமையாதது. ஆனால் இசைக்கும் தாளத்திற்கும் அடங்காத ஒரு வகைக் கவிதை யுண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது. மேலும் கவிதை இசையிலோ தாளத்திலோ அமைவது அன்று என்றும் இவை கவிதைக்கு உபகரணங்களே என்றும் நாம் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இசைக்கு வார்த்தைகள் அவசியமல்ல; அவை இசையைப் போஷிக்கும் உபகரணங்களேயாம்' என்னும் உண்மையை இசைஞானிகள் அங்கீகரிப்பார்கள். இசையின் ஆழத்தை அறியாதவர்கள் பாஷையிலோ வார்த்தைகளிலோதான் இசை இணைந்துள்ளது என்று நினைத்து, சொல்லின் இனிமையைச் சுவைத்து இசையை அனுபவித்தோம் என்று எண்ணி மகிழ்வார்கள். இதுபோலவே, சொற்கட்டும், எதுகை மோனை நயங்களையும், அவற்றால் இசையின்பமும் தாளவுணர்ச்சியும் எழும் இன்பமும் எழுவதையும் கண்டு மிரண்டு, இவையெல்லாம் உத்தமக் கவிதையின் இலட்சணம் என்று பேசுவார்கள். ஆனாலும் உண்மை காணுமிடத்து, எதுகை மோனை சொற்கட்டு முதலியனவும், மென்மை வன்மை முதலியவற்றைப் போலக் கவிதைக்கு ஆபரணங்களும் உபகரணங்களும் ஆவன என்பது தெளிவாகும். உண்மைக் கவிதை சொல்லிலும் பொருளிலும் உள்ளது. ஏற்ற சந்தர்ப்பங்களிலே எதுகை, மோனை, சொற்கட்டு, சொற்பொட்டு, பிராசம், சிலேடை, மடக்கு, முதலிய சொல்லணிகளும் உவமை முதலிய பொருளணிகளும் சொற்பொருளால் கவிப்பதவி பெற்ற கவிகளுக்கு அணி செய்யக்கூடும்; ஆயினும் இவ்வணிகளே கவியின் சொரூபம் என்று கொள்வது மடமையாகும்.

உருவந்தான் கவிக்கு ஜீவன் என்று யாரும் சொல்லமாட்டார்கள் என்று பலர் நினைக்கலாம். ஆயினும், கவியின் உண்மைச் சொரூபத்தைக் காண்பது கடினமாததால், பலர் அதன் சொரூபத்தைப் பலவாறாகக் கருதுகின்றனர். 'சீர் தளை அடி முதலியன பழைய இலக்கண விதிகளின் படி அமைந்துவிட்டால், எந்த வாக்கியமும் கவியாகிவிடும்' என்று இலக்கண வித்துவான் நினைக்கக்கூடும். இதுபோலவே, இராக தாளங்களுக்கு ஏற்றனவாய் அமைவன எல்லாம், பாடகர்களுக்குக் கவியாகி விடும்.

சிலர் 'தமக்கு விளங்குவனதாம் கவி' என்று நினைப்பர். "கவிக்கு வேண்டியது எளிமை. வேண்டாத விஷயங்களை வந்து செய்யுளைக் கலக்கக்கூடாது. அடைகளை மேலே மேலே போடுவதால் கவியின் உள்ளக்கிடை மறைபட்டுப் போய்விடுகிறது; கவியில் ரஸம் இல்லை என்றாகிவிடுகிறது" என்பது இவர்கள் சித்தாந்தம். உண்மைக் கவி எந்த ரூபத்தையும் மேற்கொள்ளக் கூடும் என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். 'எளிமைதான் அழகு' என்பது போல இருப்பது இவர் சொல். சிலர் எளிமையே மக்களாகவே கொள்ள நிருப்பிதைக் கண்டே, ஏழைகளும் மக்களே என்று வற்புறுத்துவதற்காகச் செய்யும் பிரசாரமாயின், இக்கொள்கையால் யாதொரு தீங்கும் நேரிடாது. ஆனாலும், பல வின்னியாசங்களுடன் அமைந்திருப்பதாலேயே கவி கவித்தன்மையை இழந்து விடுகிறது என்ற கொள்கை எழுவதற்கு இடங்கொடுப்பது; கவி-தத்துவத்தை அறியவிரும்புவோருக்குப் பெரிய முட்டுக்கட்டையாகிவிடும். கவியின் உருவம் மென்மையாகவும் இருக்கலாம்; கரடுமுரடாகவும் இருக்கலாம்; துல்லியமாய் ஒழுங்குபட்டதாக இருக்கலாம் கட்டுக்கு அடங்காததாயும் அமையலாம். கவியின் உயிர் கருத்திலும் கருத்தை ஏற்றவாறு விளக்கும் சொல்லிலும் அன்றோ இருக்கின்றது; இவ்வாறு சொல்லும் பொருளுமே ஒன்றினை 'இது கவி' என்று தெளிவாகக் காட்டும்போது, கவி என்ற பெயரை அதற்கு மறுக்க இயலாது.

ஒரு வாக்கியத்தை வன்மையுறக் கூறுவதற்குச் சில உபாயங்கள் உண்டு அவ் வுபாயங்களால், சொல்லப் புகுந்த விஷயத்தைப் பசுமரத் தாணி போல மனதிலே பதியச் செய்யலாம். ஆனால் அவ்வாறு கூறிவிடுவதால் மட்டுமே, கவியல்லாத வாக்கியம் கவியாகிவிடாது.

மனதிலே ஒரு உண்மை நன்றாக அழுந்தும்படி செய்வதற்கான மார்க்கங்களிலே, திரும்பத் திரும்பச் சொல்லுதல் என்பது ஒன்று. 'அவனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' என்றால், நோக்கம் என்னும் தொழில் நிகழ்ந்தது என்பது கேட்போர் மனதிலே நன்றாகப் பதிந்துவிடுகிறது. ஆனால் இதில் கவிதையில்லை; வன்மையே இவ்வசனத்திலே உள்ளது. வேறொரு வசனத்தை நோக்குவோம். "வாலி வீழ்ந்தான்; அவன் வாலும் வீழ்ந்துவிட்டது" என்பதிலே கவிதை இருப்பதைக் காண்கிறோம். 'வாலி வீழ்ந்தான்' என்றதாலே வாலும் வீழ்ந்தது தெளிவு. அதை வற்புறுத்துவதிலே ஒரு கருத்துப் பொதிந்து கிடக்கிறது என்று தோற்றுகிறது. அதுதான் இராவணனை வாலியின் வாலால் கட்டுண்ட கதை பற்றிய பெருந்த விகடம். எனவே, கருத்தை வற்புறுத்துவதற்காக மட்டும் ஒரு சொல்லைத் திரும்பத் திரும்பப் பிரயோகிப்பதால் கவிச்சுவையில்லாத வாக்கியம் கவியாகிவிடாது. கவிச் சுவையுள்ள வாக்கியமும் அதிகச் சுவையுள்ளதாகிவிடாது. அவ்வாறு திருப்பத் திருப்பச் சொல்லாத வாக்கியத்திலும் தப்பிச் செல்லுவதிலே சுவை மிகுந்துவிடாது. மென்மை, கம்பீரம், வேகம்; வன்மையுறக் கூறுதல், இனிமைபடக் கூறுதல் முதலியன எல்லாம் வேறு.

இவ் விமரிசனத்திற்குக் காரணமாக அமைந்தது ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் எழுதியுள்ள 'கவியும் உருவமும்' என்னும் கட்டுரை. அவர் அக்கட்டுரையிலே புறநானூற்றிலுள்ள 164 செய்யுளைச் சுட்டிக்காட்டி அதனுள் ரசம் இல்லை என்கிறார். "வாசகர்கள் இதை வைத்துக்கொண்டு கஷ்டப்பட வேண்டாம். வாசித்து அப்படியே விட்டுவிடலாம்" என்கிறார். எனக்கு அப்படித் தோன்றவில்லை. பல காரணங்களால் மறைவுடைய செய்யுளிலுள்ள சொற்களின் ஆணிமையும் வன்மையும் எளிமையும் காம்பீரியமும் முதலிய தன்மைகளையே நாம் முழுதும் அறிய இயலாத நிலையில் [illegible] என்பது [illegible] லெல்லாம் அமைவதாக இல்லை; அது கருத்திலும் சொல்லும் முறையிலும் அமைந்துள்ளது. செய்யுளின் முதல் எட்டு வரிகள் வருமாறு:

> ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பின்
> ஆம்பி பூப்பத்தேம்பு பசி உழவாப்
> பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
> இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
> சுவைத்தொறு அழூஉம் தன் மகத்து
> முகம் நோக்கி
> நீரொடு நிறைந்த ஈரிதழ்
> மழைக்கண் என்
> மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
> நிற் படர்ந்திசினே நற்போர்க் குமண.

'குமணனுக்கும் அவன் தம்பிக்கும் நிகழ்ந்த போரினையும் அதற்கு முன்பும் பின்பும் நடந்த செய்திகளையும் கூறும் ஒரு காவியத்திலே ஒரு கூத்தன் கூறிய வார்த்தைகளை எடுத்து, அவன் பாடிய பாட்டு என்று புறநானூற்றிலே தொகுக்கப்பட்டது இது' என்பதை நாம் மறக்கக்கூடாது. 'தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது இது' என்ற குறிப்பு புறநானூற்றிலே உள்ளது. 'நற்போர்க் குமண!' என்பது இந்நிலையில் எவ்வளவு ஆழம் புஷ்டியுள்ளதாகிவிடுகிறது!

ஏனைப் ஐந்து வரிகள் வருமாறு:-

> என்னிலை அறிந்தனை ஆயின் இந்நிலைத்
> தொடுத்துங் கொள்ளாது அமையலென்;
> அடுக்கிய
> பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
> மண்ணமை முழவின் வயிரியர்
> இன்மை தீர்க்குங் குடிப் பிறந்தோயே.

'நற்போர்க் குமண!' என்றது போல [illegible] பண்ணமை... பிறந்தோயே!" என்ற விளியும் அர்த்த புஷ்டி வாய்ந்ததாய்க் கவியின் உள்ளக்கிடையை விளக்குவதாகின்றது. குமணனிடம் வந்த கூத்தன் குமணனுடைய பரிதாப நிலையைக் காண்கிறான். ஆயினும் அவனுக்குக் குமணனையன்றி வேறு புகலிடம் உண்டோ? 'என் நிலைமையெல்லாம் சொன்னால் அவன் இந்நிலைமையிலும் இன்மை தீர்ப்பான்' என்று உறுதி கொள்கிறான். அவ்வுறுதியாலேயே, அவன் தான் கண்முன் காணும் குமணனது பரிதாப நிலையை மறந்து, குமணன் கண்முன் தன் மனைவியின் பரிதாப நிலையைக் காட்டுகிறான்:

> 'சுவைத்தொறு அழூஉம் தன் மகத்து
> முகம் நோக்கி
> நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்
> கண் என்
> மனையோள்' என்கிறான்.

அந்நிலையிலும் கூத்தனது மனைவி தன் கணவன் முகம் நோக்கவில்லை. தன் நிலைமை கண்டு கணவன் வருந்துவானே யென்று கண்களிலே நிறைந்த கண்ணீரை அடக்கிக் கொண்டிருந்தாள். "ஆயினும், அவளது எவ்வம் என் கண்ணிற் பட்டது. மனைவி குழந்தையின் முகத்தை நோக்கி வருந்துகிறாள்; நான் அவள் முகம் நோக்கி வருந்துகிறேன். எங்கள் மூவர் துயரத்தையும் போக்குவது எவ்வாறு என்று ஆலோசித்து, 'நீயே எம்போன்ற கூத்தரின் இன்மைதீர்க்கும் குடியிற் பிறந்தவன்' என்று நிச்சயித்து நீ பாரிலே இத்தகைய பரிதாப நிலையிற்றபோதும் உன்னிடமே வந்தேன்" என்கிறான். இவ்வாறு சொல்லப்படும் சொல்லின் அழகினைச் சொல்ல வேண்டியதில்லை. (வரும்)

## திருச்சி ரேடியோ

### வியாழன் மார்ச் 1

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருப்புகழ் மணி † 8 15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.30 திருகோகர்ணம் சுப்பிரமணிய ஐயர் வீணை 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருவாரூர் ஆர் சுப்ரமணியன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருக்கோகர்ணம் சுப்பிரமணிய ஐயர் பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 திருவாரூர் ஆர் சுப்ரமணியன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 குடிசைத் தொழில் 7-20 அறிப்புகள் 7.35 ஆடுபாம்பே 7-45 தமிழில் செய்திகள் 8 முன்னேற்டம் 8-15 திருகோகர்ணம் என் மாணிக்கம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 கே வி காளிதாஸ் 10 இசைவேளை 10-30 முடிவு.

### வெள்ளி மார்ச் 2

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பாபசாலை பி பொன்னம்மாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி கே கணேசய்யர், கே ராமய்யா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 பாபசாலை பி பொன்னம்மாள் பாட்டு 5-40 குழந்தைகளின் நிகழ்ச்சி(?) 6 பி வி கணேசன், கே ராமையா பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7·15 செய்தி விளக்கம் 7-20 அறிவிப்புகள் 7-25 இருகுரலிசை 7-45 தமிழில் செய்திகள் 8 திருவாவடுதுறை என் ராஜரத்தின பிள்ளை, என் ஆர் நடராஜ சுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 உலகவிவகாரங்கள் 10 இசைவேளை † 10-20 முடிவு.

### சனி மார்ச் 3

காலை: 7.45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 மதுரைமணி ஐயர் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலை இசை 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஐரோப்பிய சங்கீதம் 2 தமிழில் செய்திகள் 2-05 ஜி என் கிருஷ்ணசாமி பாட்டு 2-30 முடிவு.

மாலை: 5 பந்தணைநல்லூர் எம் முத்தையா பிள்ளை வயலின் 5-40 திருமந்திர விளக்கம் 6 ஜி என் கிருஷ்ணசாமி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புனர்நிர்மாணக் கொள்கைகள் 7-30 அறிவிப்புகள் 7-35 என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டி 7.45 தமிழில் செய்திகள் 8 மதராஸிலுள்ளபடி 9-15 திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வீணை கோட்டு கோட்டு வாத்தியம் 10 இசை வேளை † 10.30 முடிவு.

### ஞாயிறு மார்ச் 4

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 எச் எம் வி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இசைக் கதம்பம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 காலை இசை 2-30 முடிவு.

மாலை 5 பந்தணைநல்லூர் எஸ் ராஜாயி பாட்டு 5-40 தேவாரா தனை 6 பந்தணைநல்லூர் எஸ் ராஜாயி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இறை தேவை 7-30 அறிவிப்புகள் 7.35 புதிய வெளியீடுகள் 7-45 தமிழில் செய்திகள் 8 டி வி நமசிவாயம்பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 எம் என் நடராசபிள்ளை புல்லாங்குழல் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் மார்ச் 5

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருவிளையாடற் கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 சூரியனார்கோவில் கே நாராயணசாமிப் பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் டி ராசப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 சூரியனார்கோவில் கே நாராயணசாமி பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 கே எஸ் நாராயண ஐயங்கார் † 6-15 இலக்கிய வாசகம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 மலரும் மணம் † 7.30 அறிவிப்புகள் 7-35 வம்பு வேண்டாம் 7.45 தமிழில் செய்திகள் 8 மன்னார்குடி ராஜகோபால பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 விடுதலை தத்துவம் 10 இசைக்கதம்பம் † 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமிகாந்தன் கொலை வழக்கு

# "அவனைத் தொலைத்துவிட எண்ணியிருந்தேன்"

—ஜயானந்தம்.

## ஜயானந்தம் கூறிய சாட்சியம்

கேள்வி: "எங்களை" என்றது யார் யாரை? — பாகவதரையும் கிருஷ்ணனையும். சீனன் அப்படிச் செய்துவிட்டு அந்த வெற்றிலையையும் உப்பையும் பாகவதரிடம் கொடுக்க, பாகவதர் அவற்றை வாங்கி வெற்றிலை சாம்பை யசுற்றிவிட்டு எங்களிடம் தின்னும்படி தர நாங்கள் அப்படியே செய்தோம். பின்னரும் பாகவதர் எங்களைப் பார்த்து "இப்படியெல்லாஞ் செய்வது எதற்காகவென்பது உங்களுக்கு விளங்குமோ" என்று கேட்க, "ஓம், விளங்குகிறது; உங்களைக் காட்டிக்கொடுக்கவொண்ணு தென்பதற்காகத்தான்" என்றோம். பின்னும் பாகவதர் எங்களை நோக்கி, "அந்த உப்பும் வெற்றிலையும் என்ன அடையாளமென்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்: உப்பு நான் பாடுபட்டுழைத்த பணத்தின் அடையாளம்; வெற்றிலை என் தேகத்தைப் பாதுகாக்கவேண்டுமென்பதற் கடையாளம்; உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டும்; அவர்களுக்குத் துரோகஞ் செய்யலாகாது" என்று சொல்லிவிட்டு பாகவதர் ஒரு கட்டுப் பண நோட்டைக் கைசியிலெடுத்துக் கிருஷ்ணனிடம் கொடுத்தார்; அவைகள் ரூபா 10 ரூபா நோட்டுகளாகும்.

பணத்தைக் கொடுக்கலாமாவென்று கிருஷ்ணன் அப்பொழுது கேட்டார்.

"அதனாலென்ன? நம் சீனன்தான் இருக்கிறானே" என்று பாகவதர் பதிலளித்தார்.

கிருஷ்ணன் பணத்தைச்சீனனிடம் கொடுத்து, இது முன்பணமென்றும் வேலை முடிந்தபிறகு தங்களிடம் வந்து மேலும் ரூபா 2000 வாங்கிக்கொள்ளலாமென்றும் பாகவதர் கூறினார்.

வேலை முடிந்தபிறகு கமலாநாதன் மூலமாகப் பணமனுப்பப்படுமென்றும் அல்லது தங்களிடமே வாங்கிக் கொள்ளலாமென்றும் பாகவதரும் கிருஷ்ணனும் சொன்னார்கள். பின்பு நாங்கள் வாத்து கோழியுள்ள மார்க்கெட்டுக்குப் போனோம். சீனன் என்னிடம் பத்து 5 ரூபாய் நோட்டுகளைத் தந்தார். நாகலிங்கம் மறுநாள் சைக்கிளில் வந்து அழைத்துக்கொண்டு போவதாகவும் தெரிவித்தார்.

கேள்வி: நீங்கள் தியேட்டருக்குள் போனபோது வெளியே நின்ற வடிவேலுவும், ஸி. ஐ. டி.யும் என்ன செய்தார்கள்?—நாங்கள் தியேட்டரிலிருந்து திரும்பும்போது அவர்களும் கூட வந்தார்கள்.

கேள்வி: பிறகு என்ன செய்தீர்கள்?—பிராட்வேக்குப்போய் வீட்டுச் சாமான்கள் வாங்கினோம்.

பின் நவம்பர் 8-ந்தேதி 5-30 மணியளவில் நாகலிங்கம் என் வீட்டிற்குச் சயிக்கிளில் வந்து புறப்படும்படியாகக் கேட்டார். நான் நாகலிங்கத்தோடு அச் சயிக்கிள் "பாரில்" சென்றேன். சென்று நாங்கள் பெரம்பூர் பாக்ஸ் ரோட்டு மூலையின் மேற்குப்பக்கமாக இருக்கச் சீனன், வடிவேலு, ராஜபாதர், ஆறுமுகமுதலி முதலியோர் அங்கு நிற்கக்கண்டோம். வடிவேலு கதைகளையாவும் முதல்நாள் இரவே முடித்துக்கொண்டபடியால் இப்போ காபி குடிப்போம் என்றார். உடனே புரசைபாக்கம் பெரியதெருவில மார்க்கட்டுக்கு முன்னால் உள்ள ஹோட்டலுக்குச் சென்றோம். ஆறுமுகமுதலி லட்சுமிகாந்தன் நடமாட்டத்தைப் பார்வையிட்டு வருவதாகச் சொல்லி வெளியே சென்றார். இப்படிப் பலமுறை போய் வருவதுமாகவிருந்தார் ஆறுமுகமுதலி, 8-45 அளவில் ஆறுமுக முதலி வெளியே வந்து "புறப்படு அவன் வந்துவிட்டான்" என்று ராஜபாதருக்குச் சொன்னார். ராஜபாதர் எங்கள் எல்லோரையும் புறப்படும்படி சொல்ல உடனே நாங்களும் ஹோட்டலை விட்டுப் புறப்பட்டோம். ஆறுமுக முதலி லட்சுமிகாந்தன் ரிக்சோவில் போவதைக்காட்டினான். "அவன் போகட்டும்; அட்வகேட் வீட்டால் திரும்பும்பொழுது நாங்கள் நடத்துவோம்" என்றான் வடிவேலு,

இந்தநேரத்தில் நாங்கள் மூவரும் இருவருமாகப் பிரிந்து ரிக்ஷோவைத் தொடர்ந்து சென்றோம், ரிக்ஷோ நற்குணம் வீட்டிற்குச் சென்றது. ஆறுமுக முதலியை ரிக்ஷோ நிற்பாட்டிய விடத்தில் காவல் வைத்தோம். சீனனை, எம், ஸி. ஏ. ஸ்ளப்பில் நின்றான். என்னையும் ராஜபாதரையும், நற்குணம் வீட்டிற்குக் கிட்டவுள்ள ஒழுங்கையிலுள்ள மாட்டுக் கொட்டகைக் கருகில் நிற்கச்சொன்னார்கள். நாகலிங்கம் எங்களுடன் பத்து நிமிஷம் கதைத்துக்கொண்டிருந்துவிட்டுப் பின் வடிவேலுவைப் போய்ச் சந்தித்தான். தற்செயலாய் லட்சுமிகாந்தன் தங்களைக்கத் தப்பினால் என்னையும் ராஜபாதரையும் பிடிக்கும்படி வடிவேலு சொன்னான், நான் ஆம் என்றேன். பின் நான் ஒரு பால் கறப்பவனுடன் சம்பாஷித்தேன். 15 நிமிஷத்திற்குப் பின்னர் ரிக்ஷோ வெளியே வந்தது. நாகலிங்கமும் வடிவேலுவும் ரிக்ஷோவைப் பின்தொடர்ந்தார்கள். கொஞ்ச நேரஞ்செல்ல எங்களை ஓடிவிடும்படியாக நாகலிங்கம் கைச்சாடை காட்டினார். உடனே நான் சூளைப் பெருந் தெருவால் ஓட்டம் பிடித்தேன். ராஜபாதரும் நாகலிங்கமும் பின்தொடர்ந்தார்கள். உடனே நான் என் வீட்டுக்கு ராயபுரஞ் சென்றேன். அடுத்த நாள் லட்சுமிகாந்தன் இறந்ததாகக் கேள்விப்பட்டேன். வெள்ளிக்கிழமைப் பத்திரிகைகளில் வடிவேலுவை லட்சுமிகாந்தன் கொலை சம்பந்தமாகக் கைதுசெய்ததையும் படித்தேன், வியாழக்கிழமை ராஜபாதரையும் நாகலிங்கத்தையும் சந்திக்கச் சென்றேன். ஆனால் சந்திக்கமுடியவில்லை. வடிவேலுவைக் கைதுசெய்த நாலாம் நாள் பொலிசார் என்னை வந்து விசாரித்தனர். என்னைப் 11-ந் தேதி மார்கழிமாதம் கைதுசெய்தார்கள்,

இதன் பின்பு தியாகராசபாகவதர் சார்பாக ஏற்பட்ட வக்கீல் ஸ்ரீ வ. இராஜகோபாலாச்சாரியார் ஜெயானந்தனை குறுக்கு விசாரணை செய்தபோது கூறியதாவது:—

நான் 11-ந் தேதி டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்டேன், அதுவரை சென்னையிலதானிருந்தேன். உதவிப் பொலிஸ்கமிஷனர் பாத்ரோ என்னைக் கமிஷனர் காரியாலயத்திற்கு அழைத்துவந்து கைதுசெய்தார். பொலிஸ் கந்தோருக்கு 11-ந் தேதி திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கு உதவி இன்ஸ்பெக்டர் ராமானுஜ ஐயங்கார் என்னை அழைத்துச் சென்றார். ராமானுஜ ஐயங்கார் என்னை கைது செய்வதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு விசாரணை செய்ய வந்தார். அப்பொழுது நான் வீட்டில பல துலக்கிக் கொண்டிருந்தேன். அவர் வந்ததினத்தின தேதியோ கிழமையோ எனக்கு நினைவில்லை. அவர் என்னிடம் லட்சுமிகாந்தன் கொலைபற்றித் தெரியுமா என்று கேட்டார்; அதற்கு நான் ஒன்றும் தெரியாதென்று சொன்னேன். நான் ஆறுமு[illegible] சொன்னதை அவர் ஒன்றிலும் குறித்துக்கொள்ளவில்லை. என்னைக் கைதுசெய்த பின்பு 5-வது நீதிபதி முன்னிலையில் கொண்டுசெல்லப்பட்டேன். அதுவும் இக்கட்டிடத்திலேதான். என்னுடன் நாகலிங்கமும் கொண்டுவரப்பட்டார். என்னை நீதிபதி வாக்குமூலம் தரும்படி கேட்டார். நீதிஸ்தலத்திற்குப் போகும்வழியில் நாகலிங்கமும் அவருடைய மனைவியும் என் கழுத்தை வெட்டிவிடுவதாகப் பயமுறுத்தினர்' ஆதலினால் எனக்கு ஒன்றுமே தெரியாதென்று நீதிபதிக்குக் கூறினேன். அவர்கள் பயமுறுத்திய விஷயத்தை நான் பொலிசாருக்குச் சொல்லவில்லை,

இதன்பிறகு 7-வது எதிரியாகிய ராஜபாதர் சார்பாக வக்கீல் ஸ்ரீ என் ராஜகோபாலன் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினார்.

பொலிஸ் துரை எனக்கு மன்னிப்புக் கொடுத்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தெரிந்த விஷயங்கள் முழுவதையும் உண்மையாகச் சொல்லுவேன் என்று துரைக்கு நான் உறுதிமொழி கொடுத்தேன், பொலிசார் இதற்கு என்னைத் தெரிந்தெடுத்த காரணம் எனக்குத் தெரியாது. இந்தக் கொலையில் எனக்கும் பங்குண்டு. வடிவேலுவிடமிருந்து லட்சுமிகாந்தன் தப்பி வந்தால் நான் லட்சுமிகாந்தத்தைச் சேர்த்துப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று வடிவேலு என்னிடஞ் சொன்னார். என்னிடம் கத்தி இருக்கவில்லை. வேறு வேலையொன்றும் எனக்கு அவர்கள் தரவில்லை, எனக்கு ஆட்கள் இருக்கிறார்களென்ற தைரியத்தால நான் ஆயுதம் எடுத்துச் செல்லவில்லை. வேறு யாரிடமாவது ஆயுதமிருந்ததா என்பதும் எனக்குத் தெரியாது.

1942-ல் கோயமுத்தூருக்குச் சென்றேன், அப்பொழுது எஸ். டி. சுப்பையா, டி. எஸ். பாலையா முதலியோரின் நட்பைப் பெற்றேன். பாகவதரையும் கிருஷ்ணனையும் எனக்குத் தெரியும். ஆனால் அவ்வளவு அறிமுகமில்லை.

லட்சுமிகாந்தத்தை நசுக்கிவிடவேண்டுமென்று எனக்கும் எண்ணமிருந்தது. "இந்துநேசன்" பத்திரிகை பிரசுரமானபின்பு எனக்கு இந்த எண்ணம் உதித்தது, இந்துநேசனை நான் படிப்பதுண்டு, என்னையும் என் தங்கையையும் அசுசியுள்ளவர்கள், துஷ்டசகவாசம் என்று லட்சுமிகாந்தன் எழுதினான். எனக்கு நடவடிக்கைகள் எடுக்கப் பணமில்லை; ஆகையால மனவருத்தத்துடன் பேசாமலிருந்துவிட்டேன். அந்த மனவருத்தம் நீங்கவில்லை, லட்சுமிகாந்தம் கொலைபற்றி நாகலிங்கம்பேசியபோது அது பெரிய விஷயம் என்று சொன்னேன். என்னைப்பற்றி லட்சுமிகாந்தம் கட்டுரை எழுதியபின்பு நான் அவனைப் பார்த்ததில்லை. இந்தப் பிரஸ்தாப கட்டுரையைப்பற்றி நான் அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. நாகலிங்கம் வடிவேலு முதலியோரைச் சந்தித்தபோது லட்சுமிகாந்தனை ஏன் கொல்லவேண்டும்; கோட்டுக்குப் போய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்று நான் சொல்லவில்லை; ஏனென்றால் நானே அவனைத் தொலைத்துவிட எண்ணியிருந்தேன். மற்றவர்கள் ஏன லட்சுமிகாந்தனைத் தொலைக்க விரும்பினார்கள் என்பது எனக்குத் தெரியாது. நாங்கள் ஒற்றுமைத் திட்டத்திலே கூடியது உண்மைதான். பாகவதரும் கிருஷ்ணனும் பணம் கொடுத்தது உண்மைதான், அவர்களிடமிருந்து 50 ரூபா நான் பெற்றேன், லட்சுமிகாந்தனைத் தொலைக்க கோட்டில் நடவடிக்கை எடுக்க முயற்சிக்கவில்லை. லட்சுமிகாந்தனை எப்படித் தொலைக்கமுடியும் என்று நான் நாகலிங்கத்தைக் கேட்டேனே யொழிய எதற்காகத் தொலைக்கவேண்டுமென்று கேட்கவில்லை.

பொலிசாரிடத்தில் ஒன்றும் தெரியாதென்று சொன்னது சுத்தப்பொய்தான்; மீண்டும் 5-வது நீதிபதி முன்பும் நாகலிங்கம் சொல்லிக்கொடுத்ததால் நான் பொய்யே சொன்னேன்.

வக்கீல்: ஆகவே நீ மற்றவர்கள் சொல்லிக் கொடுப்பதை யெல்லாம் சொல்லுவாய்போலிருக்கிறது — அப்படியல்ல, இப்பொழுது நானேதான் உண்மையைச் சொல்லுகின்றேன். உண்மை சொல்லுவதால் எனது ஆயுள் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையில நான சொல்லவில்லை. என் தாயார் உண்மை சொல்லுகிறவர்தானு என்பது எனக்குத் தெரியாது. பாகவதரும் கிருஷ்ணனும் சத்தியஞ் செய்வித்தனர்; அப்படியிருந்தும் நடந்ததை நான் சொன்னேன்.

நற்குணத்தை எனக்குத் தெரியாது. நற்குணம் வீட்டிற்கு என்னை ஒருவரும் அழைத்துச் செல்லவில்லை. நான் ஒருவனைக் கத்தியால் குத்தினேன்; அதனால் கத்தியால் குத்தியதாக வழக்குத்தொடரப்பட்டு 1943ம் ஆண்டு ஆகஸ்ட் 1-ந் தேதி தண்டிக்கப்பட்டேன், என் பேட்டையில என்னை ஒரு கள்ளன் என்று பொலிசார் குறிப்பிட்டு வைத்துள்ளனர்.

பின் 8-ம் எதிரி ஆறுமுகத்தின் வக்கீல் பார்த்தசாரதி நாயகர் குறுக்கு விசாரணை செய்தார்.

புரசை மார்க்கட்டில் ஒரு தேநீர்க் கடையில் சாயா சாப்பிட்டேன். அந்தக் கடையில் 1 மணி நேரம் உட்கார்ந்து சாப்பிட்டோம். பணம் யார் கொடுத்ததென்பது எனக்குத் தெரியாது. அன்று காலை 6-30 மணிக்கு நான் 8-ம் எதிரி ஆறுமுகத்தை பெரம்பூர் பாரக்ஸ் ரோட்டருகில் பார்த்தேன்; வடிவேலு முதலியாருடன் நின்றார். மூர் மார்க்கெட்டில் ஆறுமுகத்தைச் சுமார் 5-30 மணிக்குப் பார்த்தேன். என்னைப் பொலிசார் 10-ந் தேதி கைதுசெய்யவில்லை, வைதாப்பேட்டையிலிருக்கும்பொழுது என்னைக் கூட்டிக்கொண்டுவந்து ஆறுமுகத்தைக் காட்டினார்கள். பொலிசாருக்குக் கொடுத்த 15-ந் தேதி வாக்குமூலத்தில நான் ஆறுமுகத்தின பெயரைக் குறிப்பிடவில்லை, எனக்கு அப்பொழுது அவர் பெயர் ஞாபகமில்லை. டிசம்பர் 2-ந் தேதியிலிருந்து நகம் என்ற பொலிஸ்காரன என்னைக்கண்காணித்துவரவில்லை. தங்கை என வீட்டுக்கு வரவுமில்லை.

நீதிபதி முன்பு என்னைக் கொண்டு போனபொழுது கேசவமேனன் என்னுடன் வரவில்லை.

எனக்கு ஜெயிலில சாப்பாடு சரியாகத்தான கொடுக்கிறார்கள்.

அரசவழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

நான் என் வாக்குமூலங்களில் ஸி. ஐ. டி. என்று குறிப்பிட்டது ஆறுமுகத்தைத்தான்.

இத்துடன் ஜெயானந்தன் விசாரணை முடிவுற்றது.


## இந்துசாதனம்
### பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம், | தமிழ், | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 6 50 | 6 50 | 10 50 |

இந்தியா இலங்கை தபால் மூலம்

| ஆங்கிலம், | தமிழ். | ஆங்கிலம் தமிழ். |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 9 50 | 9 50 | 13 50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

இல்லையேல் இரண்டொரு மணி நேரமோ அவனுடன் பேசினாற்போதும்; பலமணித்தியாலக் கணக்கில் அவனுடன் பேசவேண்டியதில்லை யென்று கிழவி இராஞ்சிதத்தைக் கடிந்து கூறியுள்ளாள்; ஆனாலும் இராஞ்சிதம் அவ்விஷயத்தில் கேட்டுங் கேளாதவள் போலவும், விளங்கியும் விளங்காதவள்போலவும் நடந்து வருவாளாயினள்; இப்படி இராஞ்சிதம் நடப்பது கிழவிக்கு எள்ளளவும் விருப்பமில்லை; இனி, விசுவநாதனை அங்கே வரவேண்டாமென்று கிழவி சொல்லிவிடலாமோ என்றால், அப்படிச் சொல்லுவதைப் பாலசிங்கன் அறிய நேர்ந்தால் தனக்கும் அவனால் இடையூறு நேரிடுதலுங்கூடுமென்று பயந்தாள். இப்பொழுதும் இராஞ்சிதம் இப்படிக் கேட்டபோது, "மகளே, ஏனடியப்பா அவசரப்படுகிறாய்? கதிர்காமத்திற்கு உன்னையுங் கூட்டிக்கொண்டு போக எனக்குப் பிரியமில்லாமலல்ல; அதற்கும் முதல் அவனுடைய அருள் வேணும்; காலநேரம் வாய்க்க வேணும்; கதிர்காமம் போவதென்றால் இலேசான கருமமல்ல; காசிக்குத்தானும் நாம் நினைத்தாற் போகலாம்; ஆனால் கதிர்காமத்தில் மாத்திரம் அப்படியல்ல என்று பதில் சொன்னாள் கிழவி.

### "இப்பொழுதுதான் உண்மை வெளியாகிறது"

'பாட்டி, நான் சொல்வதை யிட்டு நீங்கள் கோபிக்கவேண்டாம்; அந்த நேரத்தில் என்னை இந்தவூருக்கு நீங்கள் கூட்டிக்கொண்டு வந்தது கதிர்காமயாத்திரைசெய்யவென்றல்லவா? ஆனால் அதனை மறந்து இப்பொழுது கதிர்காம யாத்திரை செய்வதற்கு என்ன அவசியமென்று கேட்கிறீர்கள்; இப்படிச் செய்வீர்களென்று நான் முந்தியே அறிந்திருந்தால் ஒருபோதும் உங்களுடன் இங்கு வந்திருக்கமாட்டேன்; நான் கதிர்காமம் போயே தீரவேண்டும்; என்னை அங்கே கூட்டிக்கொண்டு போவது உங்களால் முடியாவிட்டால், முடியாதென்று நேரிற் சொல்லிவிடுங்கள்" என்று சிறிது கடிந்து சொன்னாள் இராஞ்சிதம்; இப்படிச் சொல்லவே கிழவியிடத்துச் சீற்றம் பிறந்தது; "என்ன, இராஞ்சிதம், நீ இன்றைக்கு ஒருவிதமாகப் பேசுகிறாய்; உன் பேச்சு வார்த்தை நல்லாயில்லை; என்னோடு எதிர்த்துப் பேசும்படி உனக்குப் புத்தி சொன்னவன் இன்னானென்பதை யறிவேன்; அவன் இங்கே வரத் தலைப்பட்ட பிறகுதான் நீ இப்படிப் பழுதுபட்டுப் போனாய்; உன்னைக் குறைசொல்லி ஆவதென்ன? இன்று தொடக்கம் அந்த விசுவநாதன் இந்த வீட்டு வாசற்படியிற் கால் வைக்காமற் பார்த்துக்கொள்ளுகிறேன்; என்னைப்பற்றி உனக்கு நல்லாய் விளங்கவில்லை; விளங்கியிருந்தால் இப்படி ஏறுமாறாகப் பேசியிருக்கமாட்டாய்" என்று ஆரவாரஞ் செய்தாள் கிழவி. "பாட்டி, எதற்காகக் கோபிக்கிறீர்கள்? நான் இப்பொழுது என்ன பிழை செய்தேன்? உங்களை வைதேனா? இல்லையேல் வேறு ஏதுந் தீமை செய்தேனா? அவசியமில்லாமல் அந்த ஆளையேன் இழுக்கிறீர்கள்? அந்த ஆள் எனக்கு எவ்வகையான துர்ப்போதனையுஞ் செய்யவில்லையே; மேலும் அந்த ஆளை நானா இந்த வீட்டிற்குத் தேடியழைத்து வந்தேனா? நீங்களும் பாலசிங்க அண்ணாவுமல்லவா அந்த ஆளை இங்கு கொண்டுவந்து சேர்த்தீர்கள்; அநியாயமாக ஏன் ஒருவரைக் குற்றஞ் சொல்லுகிறீர்கள்..." என்று இராஞ்சிதம் சொல்லி முடிப்பதற்கிடையில், கிழவி நாகம்போலச் சீறியெழுந்து, "பார்! பார்! இப்பொழுதுதானே உண்மை வெளியாகிறது; அவனைப் பேசினால் உனக்கேன் ஆத்திரம் பிறக்கிறது? அவன் பதுங்கிப் பதுங்கி இந்த வீட்டிற் புகும்பொழுதே அது நன்மைக்கல்ல என்று நான் நினைத்துக்கொண்டேன்; பெயர்ந்தும் அந்தப் பாலசிங்கம் ஒரு நல்ல பிள்ளை, எங்களுக்கு வேண்டிய மனுஷன்; அந்த ஆளுடைய முகத்திற்கஞ்சி இவனை இந்த வீட்டில் அடுத்தேன்; இவன் இனிக்கப் பேசித் திடுக்கப்பதைக்கக் கொல்லுவானென்பதை நான் கனவிலுமறியேன்; ஆனால் அவன் தான் அந்நியன் எனக்குத் துரோகம் நினைத்தாலும் நீ எனக்குத் துரோகம் நினைக்கலாமோ? நான் செய்த நன்மைகளையெல்லாம் மறந்து இப்பொழுது என்னுடன் எதிர்த்து வார்த்தையாடுகிறாய்; நீ அந்நியவளென்பதைக் காட்டிவிட்டாய்; இப்பொழுது இந்த வீட்டை விட்டுப் போகிறேனென்று பிடிவாதஞ் செய்கிறாய்; நீ நினைத்தபடி போய்விடலாமென்று நினைத்துக்கொண்டாய்? ஒருபோதும் முடியாது; பார், பார், அந்தப் பாலசிங்கன் வருவான், அவனைக்கொண்டு உன்னை அடக்கி வைக்கிறேன்; நீ கதிர்காமம் போவதென்று சொல்வதெல்லாம் வீண் பேச்சு, நீ இந்த இடத்தை விட்டுவிட்டு அந்த விசுவநாதனுடன் கூடிக்கொண்டு ஓடப்போகப்போறாய். இதுதான் உண்மை..." என்று இப்படி ஆர்ப்பரித்துக்கொண்டு நிற்கும்போது யாரோ தலைவாசற் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வரும் அரவங் கேட்டது; வருபவன் பாலசிங்கனென்றெண்ணிக்கொண்டு "தம்பீ, பாலசிங்கம், நல்லநேரத்தில் வந்தீர்...." என்று சொல்லுவதற்கிடையில் "பாட்டி, பாலசிங்கனல்ல நான்தான் வீராசாமி வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு வந்தான் வீராசாமி.

(வரும்)


## சேலம் பீடி

யாழ்ப்பாணத்திற்கென்று
விசேஷமாக
சேலத்தில் தயார்செய்த
**'பூக்கூடை மார்க்கு'**
பீடிகள் தற்சமயம் வந்திருக்கிறது.
இந்தபீடி மணத்தாலும்
குணத்தாலும் மேலானது.
சேலத்தில் தயாராகும் பீடிகளில்
முதன்மையானது
எங்கும் எல்லா வியாபாரிகளிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்
சிலோன் ஏஜண்டு:
**C S. நடராஜா செட்டியார்,**
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்,
M/s 1-3 to 7-3-45


# யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

## 56-வது ஆண்டு மகாசபைக் கூட்டம்

இச்சபையின் 56-வது வருடாந்தக் கூட்டம் நிகழும் தாரண௵ மாசி௴ ௨௰வ (3—3—45) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

பிற்பகல் 3—4.30 நிகழ்ச்சிகள்

1 தேவார பாராயணம் 2 சென்ற வருடாந்த மகாசபைக்கூட்ட வர்த்தமானத்தைப் படித்து அங்கீகரித்தல்
3 காரியதரிசியின் அறிக்கைப்பத்திரம் வாசித்தல்
4 சைவப்பிரகாச யந்திரசாலையினதும், சபையினதும், ஸ்ரீமதி புண்ணியநாச்சி தருமத்தினதும் வரவு செலவுக் கணக்குக்களை அங்கீகரித்தல்
5 56-ம் வருடத்தில் நிருவாகசபையார் செய்துள்ள தீர்மானங்களையும் ஆற்றிய பணிகளையும்மகாசபை ஏற்றுக்கொள்ளும் பிரேரணையை நிறைவேற்றுதல்
6 சபையின் விதானங்களைத் திருத்தி அமைக்கும்படி நியமிக்கப்பெற்ற உபசபையார் சமர்ப்பித்திருக்கும் விதானங்களை அங்கீகரித்தல்
7 வருகிற வருஷத்துக்குரிய புதிய உத்தியோகஸ்தர்களையும் நிருவாகசபை அங்கத்தவர்களையும் தெரிவுசெய்தல்

பிற்பகல் 4-30—5 சிற்றுண்டி வழங்குதல்

8 சபை அங்கத்தவர்களும் மற்றை இலங்கையிலுள்ள சைவமக்களும் சிதம்பரத்துக்கு யாத்திரை செய்புங் காலத்தில் தங்கியிருக்கற்கு இடமாக மாலைகட்டித் தெருவிலும், போல் நாராயணபிள்ளை தெருவிலும் இருக்கும் புண்ணியநாச்சி மடாலயத்தில் மடங்கட்டுவதைப்பற்றி யோசித்து அதற்கான முயற்சி செய்தல்
9 சைவப்பணிகளின் அபிவிருத்தியைக் கருதி திரு வே சுந்தரையா அவர்களும் டக்டர் திரு க செல்லையா அவர்களும், திரு சு அண்ணாமலை அவர்களும் எழுதிய கடிதங்களைப் படித்து ஆகவேண்டியவற்றை யோசித்தல்
10 இப்பொழுது சபைக் காரியாலயம் நிறுவப்பெற்றிருக்கும் கட்டடம் சொந்தக்காரருக்குத் தேவையாக விருக்கின்றபடியால் ஷை காரியாலயத்தைப் பிறிதோர் கட்டடத்தில் அமைக்கும் ஒழுங்கை யோசித்தல்
11 எழுத்துமூலம் ஏலவே காரியதரிசிக்கு அறிவிக்கப்பட்ட பிற விஷயங்களிருப்பின் அவற்றை யோசித்தல் 12 தேவார பாராயணம்.

மு. மயில்வாகனம்
காரியதரிசி.

சபைக் காரியாலயம்,
வண்ணார்பண்ணை, தாரண, மாசி ௭வ (1?—2—45)


# ஏலவிற்பனை

பெரியகோட்டு நீதவானயிருந்து
காலஞ் சென்ற
**திரு. W. D. நைல்ஸ் அவர்களுக்குச்**
சொந்தமான மிகவும் நேர்த்தியான
**வீட்டுத் தளபாடங்களும்**
மற்றும் பல
**சிறந்த பொருட்களும்**
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி ரோட்டில்
றெயில்வே குட்ஷெட் (Good Shed)
டுக்கு எதிராகவுள்ள
"ஆனந்தபவன்" என்னும்
கட்டிடத்தில்
**பங்குனி௴ 3-ந்திகதி சனிக்கிழமை**
பிற்பகல் 3 மணி வரையில்
பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்கள் வருமாறு:

நடுச்சாலைக்குரிய தேக்கமரத் தளபாடங்கள், "கொல்லார்ட்" பியானோ 7 வாலவ் எச். எம். வி. ரேடியோ, சாப்பாட்டறைக்குரிய தேக்கினால் செய்யப்பெற்ற மரச் சாமான்கள், உடுப்புகள் வைக்கும் கண்ணாடி அலுமாரி, படுக்கைச் சாலைகளுக்குரிய மரச் சாமான்கள், இரும்புக் கட்டில்கள், மரக்கட்டில், நீப்போய்கள், தச்சுவேலை ஆயுதங்கள், மீற்சேவ் அலுமாரி, பீங்கான் கோப்பைகள், கண்ணாடிப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள், பர்மிய பெயின்ட் வேலைத் தட்டுமுட்டுகள், "செத் தோமஸ்" உருளோசை, சிங்கர் தையல் யந்திரம், கம்பளங்கள், பிரம்புப் பாயகள், பிரம்புத் தட்டிகள், கேட்டிலஸ் சீலைகள், சரித்திரப் புத்தகங்கள், ஆபீஸ் மேசை லாம்புகள், அடுக்களைத் தட்டுமுட்டுகள், தோட்டச் செய்கைக்குரிய ஆயுதங்கள், பூப்போச்சிகள் முதலியன.

கோணமலை ஐயாத்துரை,
Auctioneer.

M/s 229 13.4-5


## திருவிசைப்பாகாரர்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

சைவத் திருமுறை பன்னிரண்டில் ஒன்பதாவது திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டுமாகும். திருவிசைப்பாப் பாடியவர் ஒன்பதின்மர். அவர்களாவார்:- திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருஷோத்தம நம்பி, சேதிராயர் முதலியோர். இவர்களுள் சேந்தனார் கருவூர்த்தேவர் ஆகிய இருவர் சரித்திரம் தவிர ஏனைய எழுவரின் சரித்திரஞ் சிறிதும் புலப்படவில்லை. திருமாளிகைத்தேவர் சரித்திரம் திருவாவடுதுறைப் புராணத்திற் கூறியிருப்பதாகச் சொல்லுப. விசாரித்தமட்டில் தேவர் சரித்திர விபரம் தெரியவில்லை. இந் நாயன்மார்களின் சரித்திர விவரங்களைத் தெரிந்தவர்கள் இந்துசாதனவாயிலாக வெளியிடுவார்களாயின் பேருபகாரமாகும். இஃதேபோல பதினோராந் திருமுறைப் பிரபந்த ஆசிரியர்களாகிய இளம்பெருமானடிகள் அதிராவடிகள் எனனும இருவர் சரித்திரங்களையும் ஆராய வேண்டியது நமது கடமையாகும். இதுவரையில அச்சான [illegible] பதிப்புகளில் ஆக்கியோரின் சரித்திரக் குறிப்பேனும் வெளிவராதது வருந்தத்தக்கதேயாம். கூடியமட்டில் இனியேனும் இக் குறையை நீக்க முயலுவோமாக.


**விளம்பரமின்றேல்
பெரும்பணமில்லை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லட்சுமிகாந்தம் கொலை வழக்கு

1ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டுமென்று அவர் சொன்னார்: நான ஜெனறல் காலின்ஸ ரோட்டு வழியாகச் சென்று தெருமுனையில் திரும்பினேன்; அப்பொழுது ரிக்ஷா முன்னால் ஓடிவந்து வண்டியைத் தூக்கித் தள்ளிவிட்டனர் வண்டி தூக்கிவிட்டவுடன் ரிக்ஷா கர்ணம்போட்டு விழுந்தது; அப்பொழுது என் வண்டியில் வந்தவரை ஒரு ஆள் பீச்சுவாளால் குத்தினார்; உடனே குத்தப்பட்ட ஆசாமி வலது புறமாகக் கீழே விழுந்தார். தலைமட்டிலும் ரிக்ஷாவிலிருந்தது. உடம்பெல்லாம் கீழே கிடந்தது. குத்தின மனிதன் பீச்சுவாளை அவர் வயிற்றில் இடது பக்கத்தில் குத்தியிருந்தார். ரிக்ஷாவும் ஆசாமியும் கீழே விழுந்தவுடன் நான் ஒதுங்கிநின்று விட்டேன். ஓடிவந்தவர்களில் ஒருவர் இப்படிச் செய்தார், மற்றொருவர் என்னைப் பார்த்து என்னடா தேவடிப்பையா! நீயேன் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறாய்! ஓடிப்போ என்று சொல்லி எனக்கும் ஒரு அடி கொடுத்தார். அப்படி அடித்ததும நான் இன்னும் கொஞ்சம் ஒதுங்கிநின்றேன. அவர் என்னை அடித்துவிட்டுப் பையிலிருந்த பேனாக்கத்தியையெடுத்துக் குத்துப்பட்ட ஆசாமியைத் தன்னிருகடவைகிழித்துவிட்டு ஓடிவிட்டார். இவைகெல்லாம நடக்கும்போது நான் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன. குத்தினவர்கள் இருவரும ஓடிவிட்டார்கள். அவர்கள் ஓடியபின்பு நான் குத்தப்பட்டவரைத் தூக்கினேன. அவர் மீண்டும் கீழே விழுந்து கிடந்தார். துணி உடம்பெல்லாம இரத்தம் நனைந்திருந்தது. குத்தின இடத்திலேயே பீச்சுவாளிருந்தது. குத்திவிட்டு ஓடிப்போய் விட்டார்கள வேறு யாரும் இருக்கின்றார்களா பாரடா என்று அவர் என்னிடம் சொன்னார். நான் அவரைத் தூக்கி நிறுத்தினேன. பீச்சுவாளை அவர் உடம்பிலிருந்து பிடுங்கி கீழே எறிந்துவிட்டு கொஞ்சம அடியெடுத்து வைத்தார். அப்பொழுது அவர் ஒன்றும் சொல்லவில்லை.

அவர் கொஞ்சதூரம் நடந்து போனார். நானும பீச்சுவாளையும அவர் கையிலிருந்த காகிதத்தையும் எடுத்து ரிக்ஷாவில போட்டுக்கொண்டு பின்னே சென்றேன.

"அப்பா, அம்மா, ஐயா" என்று முனங்கிக் கொண்டே இடுப்பைப் பிடித்துக்கொண்டு அவர் வக்கீல் வீட்டைநோக்கிச் சென்றார். வக்கீல் நற்குணம் வீட்டிலிருந்து வந்து குத்துப்பட்ட ஆசாமியுடன் பேசிக்கொண்டிருந்தார், அப்பொழுது 5, 10 பேர் ஒரு வட்டமாய் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சின்னப்பையன் என்ற ரிக்ஷாக்காரன் வண்டி இழுத்துக்கொண்டுசென்றான், வக்கீல் அவனைக் கூப்பிட்டு அந்த ரிக்ஷாவில் குத்தப்பட்ட ஆசாமியை ஏற்றினார். நான் வக்கீலிடஞ் சென்று இந்தப் பீச்சுவாளையும் காகிதத்தையும் கொடுத்தேன். வக்கீல் என்னிடம் காகிதத்தைப் பெற்றுக்கொண்டு பீச்சுவாளைப் பொலிஸ்நிலையத்தில கொடுக்கும்படி சொன்னார். வக்கீலுக்குத் தெரிந்த பறங்கக்காரர் என் வண்டியில ஏறினார். சின்னப்பையன் ரிக்ஷா பின்னால நான் சென்றேன. சின்னபையன ரிக்ஷா யாடத்தெருவால் சென்று வேப்பமரப் பொலிஸ நிலையத்தையடைந்தது பொலிஸ்நிலையத்தில் இரு ரிக்ஷாக்களும நின்றன. என வண்டியில வந்த பறங்கக்காரர் கீழேயிறங்கி உதவி இன்ஸ்பெக்டரிடம போய்ப் பேசினார். உதவி இன்ஸ்பெக்டரும பொலிஸாரும வெளியே வந்தார்கள். குத்தப்பட்ட ஆசாமி ஏதோ இங்கிலீசில் சொன்னார், உதவி இன்ஸ்பெக்டர் குறித்துக்கொண்டார்.

குத்தப்பட்ட ஆசாமி அதில் கையெழுத்துப் போட்டுவிட்டு அதே ரிக்ஷாவில் ஜெனறல் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். நான் கொண்டுவந்த பீச்சுவாளை உதவி இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தேன். இதோ கோட்டில் இருக்கும் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணன் நம்பியாரிடம் கொடுத்தேன்.

ராஜகோபால ச்சாரியார்:—

நான் இதை ஆட்சேபிக்கிறேன். அரசினர் வக்கீல சொல்லிக்கொடுக்கிறார்.

அரசினர் வக்கீல்:— நீங்கள் ஆட்சேபிக்கும்வரை நான் அப்படித்தான் கேட்பேன்.

ராஜகோபாலாச்சாரியார்:— உங்களை நான் திருத்தமுடியாதென்று அப்போதே கைவிட்டு விட்டேன்.

சாட்சி மேலும் கூறியதாவது:— உதவி இன்ஸ்பெக்டர் என்னை ஏதோ கேட்டார். நான் பதில் சொன்னேன். அது நடந்த இடத்தைக் காட்டு என்று என்னைக்கேட்டார். நான் அழைத்துச் சென்று காட்டினேன்.

பின்பு "சரி நீ வீட்டுக்குப் போ சொல்லியனுப்பும்போது வா" என்று உதவி இன்ஸ்பெக்டர் சொன்னார் நானும் வீட்டுக்குப் போனேன. கோட்டிலிருக்கும் இன்ஸ்பெக்டர் கேசவமேனன் என்னை விசாரித்த மறுநாள் ஒரு அடையாள விசாரணை நடந்தது நான் முதல் எதிரியை அடையாளங் காட்டினேன். சுமார் ஒருமாதத்திற்குப் பின்பு நடந்த அடையாள விசாரணையில நான் இரண்டாம் எதிரியை அடையாளங் காட்டினேன். ரிக்ஷாவைப் பொலிசார் பிடித்துக்கொண்டார்கள.

ரிக்ஷா கீழேயிருக்கிறது அவசியமானால் பார்க்கலாம் என்று அரசினர் வக்கீல் சொனனார். பின்னர் ரிக்ஷா ஸீல் வைத்தபடி பார்ஸலாகக் காட்டப்பட்டது

பின்னர் பிரதமமாகாண நீதிபதி முன் இவன் சொன்ன வாக்குமூலத்தைக் கொண்டுவருவதாக அரசினர் வக்கீல் தெரிவித்தார்

அப்பொழுது முதல் எதிரி வக்கீல் சொன்னதாவது:

பிரதமபாகாண நீதிபதிமுன் சாட்சி கோபாலன் செய்த வாக்குமூலப் பிரதி வேண்டுமென்று நான் கேட்டேன், அப்போது இத்தகைய வாக்குமூலம் ஒன்றும் கிடையாதென்று சொல்லப்பட்டது இப்பொழுதோ அந்த வாக்குமூலத்தைக் கொண்டு வருவதாக அரசினர் வக்கீல் தெரிவிக்கிறார்

அந்த வாக்குமூலம் கோட்டில் வாசிக்கப்பட்டது

அந்த வாக்குமூலத்தில் கண்டிருந்ததாவது:—

பெருமாள் மகன் கோபால் காக்கா தோப்பில வசிக்கிறான், 8-11-44 இந்த லட்சுமிகாந்தம் இந்த ரிக்ஷாவில நற்குணம் வீட்டிலிருந்து திரும்பிய போது இருவர் ஓடிவந்து பீச்சுவாளால லட்சுமிகாந்தனைக் குத்தினார்கள்; பின்னர் ஓடிவிட்டனர்.

மேலும் சாட்சி கோட்டில்சொன்ன சம்பவங்கள் அனைத்தும் அவ் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இத்த[illegible] புதன்கிழமை [illegible].

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1942ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு க. செ. த. செ. செல்லையாபிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 26ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:.

| நம். | தி. | ரூ. | ஊர், பெயர், நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 1943ம் வருஷம் மார்ச் மாசம் | | | |
| 4037 | 20 | 210 | சப்பல்ஸ்ட்ரீட் A. G. திசவீரசிங்கம் இமி சி கல் வைத்த தாலியுடன் சங்கிலி 1 ஷை கல் வைத்த கவுத்தோர் 1 குண்டு வைத்த குதிரை முழுப்பவுண் 1 |
| மேமீ | | | |
| 626 | 25 | 65 | நாவற்குழி சின்னப்பு கனகர் அச்சுக்காப்பு சோ 1 ஒரு கா. முறி. |
| செப்டம்பர்மாசம் | | | |
| 2000 | 3 | 115 | அச்சுவேலி வடக்கு ஆறுமுகம்கந்தையா இமி சி கல் டிம்மி பதக்கத்துடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 2060 | 6 | 50 | சிவலிங்கப்புளியடி நாகலிங்கம் அமிர்தலிங்கம் கம்பி வளையல் காப்பு சோடி 1 |
| அக்டோபர் மாசம் | | | |
| 2457 | 4 | 12 | கோப்பாய்தெற்கு இராமு செல்லம் இமி சி கல்வைத்த தாயத்து 1 |
| நவம்பர்மாசம் | | | |
| 3052 | 9 | 75 | சிவலிங்கப் புளியடி தம்பி நடராசா அல்பேட் சங்கிலி 1 |
| 3307 | 24 | 20 | சங்கானை கணபதி நடராசா ஆடுத்தன் மோதிரம் 1 |
| டிசம்பர்மாசம் | | | |
| 3614 | 15 | 60 | உடுவில் சுப்பிரமணியம் சதாசிவம்பிள்ளை கொழுக்கி இல்லாத அரைஞாண் கொடி 1 |
| 3680 | 20 | 60 | துணைவி சின்னத்துரை மகேந்திரன் முருக்குவளையல்காப்பு சோ 1 |

விற்பனவு தாரணவருஷம் பங்குனிமாசம் 4-ந் திகதி (17-3-45) சனிக்கிழமை எடுபட்டநகை பிறகீங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்திஸ்மேஸ்தர்.

Mis 226 26-2 & 1-3-45

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ்செய்தல்


**புதியதினிசுகள் யாவும் இங்குள்ளன!**

இந்தியாவிலுள்ள நாகரீக வட்டாரத்திலுள்ள
அழகான புடைவைகள்
யாவும் புதியன — யாவும் கண் கவர்வன
வந்து ஒருதரம் பார்வையிட்டால் ஒன்றிற்கு
மேற்படவே வாங்குவீர்கள்
நாகரீக நங்கைக்கும் — மணப் பெண்ணுக்கும் ஏற்றவை
எவ்விழாவிற்கு முகந்த பட்டுக்கள்
ஜாரி - ஜோர்ஜெற் - ஒர்கென்ஸா
ஷைநொன் - ரிஷ்பூ - பிஷ்நெற்
எம்புறொயிடேட் நெற் முதலியன

**நொவெல்ற்றி ஸில்க் ஸ்டோர்**

பெனாரிஸ் பட்டுக்கள் ஏராளமாகத் தருவிப்போர்.
பெருந்தெரு, யாழ்ப்பாணம்.

### மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம், டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் ஆண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல் இம்போட்கம்பெனி
28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 1, March, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org